விலை சதம் 25

# காந்தீயம்

**சர்வோதயம்**

சர்வோதயமென்ருல் பிரச்சினைகள்
அனைத்துக்கும் ஒரு வழி பிறப்பது;
அதாவது உதயமாவது [தான்]
— காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகள்

மலர் 15 | காந்தீ நிலையம் - உருத்திரபுரம் ( காந்தீ ஆண்டு 108 ) 1978 பெப்ரவரி | இதழ் 5

# உலகம் ஒன்றுபட வழி

## விநோபாஜி



"பல கருத்துக்களைக் கொண்டவர்களும் ஒன்றுபட வேண்டும். அவரவர்கள் கருத்துக்களையும் அனைவரின் நலன் என்னும் உரை கல்லில் உரைத்துப் பார்க்கவேண்டும். அனைவரின் மேம்பாடு என்பது குறிக்கோளாக அமையும்போது, கட்சி வேறுபாடுகளுக்கே இடமில்லாது போய்விடும். 'ஒரு உலகம்' என்னும் கருத்து இதிலிருந்து தான் பிறக்கிறது" என்று கூறுகிருர் விநோபா அடிகள்.

என்னிடம் வினு ஒன்று கேட்கப்பட்டுள்ளது. அதில் நாம் 'வாழ்க வையகம்' (ஜய் ஜகத்) என்று கோஷமிடுகிருேம்; உலகெல்லாம் ஒன்று படட்டும் என்றும், உலக மக்களிடையே உயர்ந்தவன் - தாழ்ந்தவன், ஏழை - பணக்காரன், தன்னுடையது மற்றவனுடையது என்ற வேறுபாடுகள் இருக்கக் கூடாது, மனிதன் மனிதனுக வாழவேண்டும் என்றெல்லாம் விரும்புகிருேம். இது சாத்தியமா? மனிதன் தனியாக வாழ்வதில்லை. அவன் தன்னைச் சுற்றி ஒரு சமூகத்தை அமைத்துக் கொள்கிருன், ஒரு கருத்தைச் சுற்றி ஒரு கூட்டம் அமைகிறது. மற்ருெரு கருத்தை மேற்கொண்டு மற்ருெரு கூட்டம் அமைகிறது. இன்று கருத்தின் அடிப்படையில்தான் சமுதாயங்கள் அமைக்கப்படுகின்றன. நம் கருத்தை விரும்பாதவர் நம்மைப் பகைத்துக் கொள்ளக் கூடும். ஒரேமாதிரியான கருத்துக்களைக் கொண்ட பலர் ஒன்று கூடி தனித்தனி சமூகங்களாக பிரிந்து வாழும் போது வெவ்வேறு கருத்தைக் கொண்டவர்கள் ஒன்ருக வாழ்வது எப்படி சாத்தியம்? கருத்துக்கள் வேறுபடுவதால், பிளவுகள் ஏற்படுகின்றன; அவை நிலையாக நிற்கின்றன என்பது உண்மையான நிலை. ஆனல் பிளவேயில்லாத சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்பது நமது இலட்சியம். இவையிரண்டும் எப்படி ஒன்ருேடு ஒன்று பொருந்தும்? 'உலகம் உவப்ப' என்ற நமது இலட்சியம் எப்படி கைகூடும்? என்று கேட்கப்பட்டுள்ளது.

இது மிகவும் நிரந்தரமான பிரச்சினை. இதற்கு பலர்விடை அளித்திருக்கிருர்கள். எனினும் இப்பிரச்சினை இன்னும் இருந்து வருகிறது.

### இயற்கையில் வேற்றுமை

இயற்கையில் பல பொருட்களிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் தனித்தனி வகையைச் சேர்ந்திருந்த போதிலும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. மா மரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் இலை, பூ, காய் கனி, தண்டு, மரம் ஆகிய பல அம்சங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித்தன்மையும், தனிப்பயனும்வாய்ந்தது. எனினும் அவை இணைந்தே மாமரமாகிறது. ஒவ்வொன்றிற்கும் தனித்தனி வேலைகள் உண்டு. அப்படியிருக்க, அவற்றுள் உள்ள வேற்றுமை எத்தகையது? ஒரு கட்சி, 'அவற்றில் வேற்றுமையிருந்த போதிலும் அவை வேற்றுமையற்றவை' என்று கூறுகிறது. மற்ருெரு கட்சி இயற்கையிலேயே மாறுபட்டிருக்கக் கூடியது. எனவே அவற்றை இணைப்பது கடினம். ஆனல் முயற்சி செய்தால் கைகூடும்' என்கிறது மற்ருெரு கட்சி, இவை முற்றிலும் இணைக்க முடியாதவை என்று கருதுகிறது. இவை யாவும் நமது கருத்தில் ஏற்படும் மாறுபாடே என்பது என் கருத்து.

### சர்வோதயத்தின் அடிப்படை

சர்வோதயத்தின் அடிப்படை இம்மூன்று கருத்துக்களையும் இணைப்பதாகும். மனிதன் சமூகமாகவே வாழ விரும்புகிருன். ஆனல் தனது தனிப்பட்ட சிறப்புக்களை உரிமைகளை நற்பண்புகளை தியாகம் செய்யாமல் சிறந்த முறையில் வளர்க்கவே விரும்புகிருன், ஆனல் சமுதாய வாழ்வு அவனுக்கு இன்றியமையாததாகிறது. சமுதாயத்தை அமைத்துக் கொள்ளும் பொழுது அவன் தன்கருத்தின்படி ஒன்று சேர விரும்புகிருன். அதற்கு பிறரும் தன்கருத்தை அல்லது ஒரு சமுதாயத்தின் கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றுவிரும்புகிருன். அப்போது அது இரு மனிதர்களிடையே உள்ள சண்டையாக அல்லாமல் இரண்டு குழுக்களிடையே ஏற்படும் சண்டையாக இரு கருத்துக்களின் மோதலாகி விடுகிறது. ஒருவர் கருத்தை மற்றவர்கள் ஏற்கும்படி செய்வதெப்படி? இரண்டு முறைகள் நம் முன்னிருக்கின்றன. ஒன்று பலாத்காரத்தைப் பயன்படுத்தி சுரண்டல் முறைகளை பயன்படுத்திச் செய்வது. மற்ருென்று அவர்களை அணுகி பேசி அவர்கள் இக் கருத்தை நன்கு ஆய்வு செய்வது. இ முறையில் மன மாற்றமே மு கியமாகிறது.

கம்யூனிஸ்டுகள் முதல்முறையைப் பின்பற்றுகிருர்கள்; மத

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ சர்வோதய தத்துவ திங்கள் வெளியீடு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதறிஞர் ராஜாஜி

அறிவால் உயர்ந்த மேதை ராஜாஜி. தனது அறிவை முழுக்க, முழுக்க நாட்டின் நலனுக்காகப் பயன்படுத்தி இறவாப் புகழைத் தேடிக் கொண்டவர் ராஜாஜி.

காந்திய யுகத்தைச் சேர்ந்த தலைவர்களில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாருக்குத் தனிப்புகழ் உண்டு. அவர் அண்ணலின் அடிச் சுவட்டில் சென்றவர். அண்ணலின் அரசியல் கருத்துக்களைச் செயல் படுத்திய தீரர். அண்ணலோடு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்த பொழுது தயங்காமல் கூறிய பெருமை அவருக்குண்டு.

ராஜாஜியின் கருத்துக்களில் பல விவாதத்திற்குரியவைகளாக இருக்கலாம். ஆனால் அவரிடமிருந்த நாட்டுப் பற்றும், தொண்டுள்ளமும் அவரோடு கருத்து வேறுபாடுகள் கொண்டவர்களாலும் போற்றிப் புகழ் பெற்றவை.

பற்றி எண்ணிப் பார்த்தார். காந்தியடிகள் இந்திய அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட பொழுது, அவரைப் பின்பற்றி ராஜாஜியும் அரசியல் வேள்வித் தீயில் குதித்தார்.

1919 இல் ரௌலட் சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார். அப்பொழுது அவர் தமிழ் நாட்டுக் காங்கிரசுக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்தார். 1921 ஆம் ஆண்டில் வேலூரில் போடப்பட்டிருந்த தடை உத்தரவை மீறிப் பொதுக் கூட்டத்தில் பேசினார். அதற்காகக் கைது செய்யப்பட்டார். சிறைத்தண்டனை கிடைத்தது.

1930 ஆம் ஆண்டில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்திலும் பெரும் பங்கு பெற்றார். அதற்காகவும் சிறைத்தண்டனை அனுபவித்தார்.

---

**மூதறிஞர் ராஜாஜி அவர்களின் நூறுவது ஜயந்தி விழாவை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

---

ராஜாஜி 1879 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8 ஆம் நாளில் தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒசூரைச் சேர்ந்த தொரப்பள்ளி என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரது தந்தையார் சக்கரவர்த்தி அய்யங்கார். அன்னையார் சிங்காரம் அம்மாள்.

ராஜகோபாலாச்சாரியாரின் தொடக்க கல்வி ஒசூரில் நடைபெற்றது. பின்னர் பெங்களூரில் உயர் கல்வி பெற்றார். அங்குள்ள சென்டிரல் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். அவருக்கு வழக்கறிஞர் தொழிலில் நாட்டம் பிறந்தது. சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்குரைஞரானார்.

ராஜாஜி சேலத்தில் தனது தொழிலைத் தொடங்கினார். அவரது அறிவாற்றல் மிகவும் கூர்மையானது. சிறந்த நாவன்மை இருந்தது. வாதத் திறமையோ எதிர் வழக்குரைஞர்களைத் திணறச் செய்தது. இதனால் தொழிலில் பெயரும், புகழும், பணமும் கிடைத்தன.

ராஜாஜி வழக்குரைஞராகப் பொருளைத் தேடுவதில் மன அமைதி பெறவில்லை. நாட்டின் விடுதலையைப்

காங்கிரசுக் கட்சியின் தலைவராகவும் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியிருக்கின்றார். 1937 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் காங்கிரசுக் கட்சியின் அமைச்சரவை அமைக்கப் பெற்ற பொழுது ராஜாஜி முதலமைச்சர் பொறுப்பேற்றார்.

1942 ஆம் ஆண்டில் காங்கிரஸ்கட்சியோடு அவருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ராஜாஜி பாகிஸ் தான் பிரிவினையை ஆதரித்தார். காங்கிரஸ் கட்சி அதனை எதிர்த்தது. இதனால் அவர் கட்சியை விட்டு வெளியேறினார். பின்னர் 1945 இல் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

1946 - 47 இல் மத்திய அரசில் அமைச்சராகவும், 1947-48 இல் மேற்கு வங்க ஆளுநராகவும், 1948 முதல் 1950 வரை இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகவும், 1950 இல் மத்திய அரசில் உள்துறை அமைச்சராகவும், 1952 முதல் 1954 வரை தமிழ் நாட்டில் மறுபடியும் முதல் அமைச்சராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

1955 ஆம் ஆண்டில் அவரது பொதுத் தொண்டைப் பாராட்டும் வகையில் இந்திய அரசு அவருக்கு பாரத ரத்ன பட்டத்தை வழங்கியது.

நல்ல மக்களாட்சி அமைய சரியான, வலுவான, எதிர்க்கட்சி உருவாக வேண்டுமென்று ராஜாஜி கருதினார். இதனால் 1959 ஆம் ஆண்டில் சுதந்திரா கட்சியை தொடங்கினார்.

ராஜகோபாலாச்சாரியாரின் பொதுப் பணிகளில் தலைசிறந்து விளங்குவது, அவர் 1924 ஆம் ஆண்டில் சேலத்திற்கருகில் திருச்செங்கோட்டில் தொடங்கிய காந்தி ஆசிரமமாகும். அங்கு கதர், உணவுக்குப் பயன்படாத (வேப்பெண்ணெய்) எண்ணெய்யில் சோப்பு ஆகியவை உற்பத்தி செய்யப் பெறுகின்றன. 1925 முதல் அங்கு ஒரு குஷ்ட நிவாரண மருத்துவ நிலையம் செயல் படுகின்றது.

ராஜாஜி அரசியலில் பெருந் தலைவராக விளங்கியதைப் போன்றே தலைசிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அவரது பேனா ஓய்வின்றி எழுதிக் கொண்டேயிருந்தது. எழுதாத - தொடாத - பொருளே இல்லையென்று கூறலாம். பெரியவர்களுக்கு சிம்லாவில் உடன்படிக்கையை எழுதிய அவரது விரல்கள் அதே நேரத்தில் ஆத்திச் சூடிக்கு விளக்க உரையும் எழுதின. அவர் எழுதிய மகா பாரதம், ராமாயணம் போன்ற நூல்கள் உலகெங்கும் படிக்கப் பெறுகின்றன. பல அருமையான அரசியல், சமய நூற்களை எழுதிய ராஜாஜி சிறந்த சிறு கதை எழுத்தாளராகவும் விளங்கினார். ஐக்கிய நாட்டுச் சபை பற்றி ஆங்கிலக் கவிதையொன்றும் இயற்றியுள்ளார்.

ராஜாஜி சிறந்த சமுதாய சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார். அவரது மகளுக்கும் காந்தி அடிகளின் மகனுக்கும் திருமணம் நடைபெற்றது. தீண்டாமை ஒழிப்பிலும் தீவிரமாக இருந்தார்.

ராஜாஜியின் கொள்கைப் பிடிப்பிற்கு எடுத்துக்காட்டாக அவர் இறுதி வரை மதுவிலக்கு பிரசாரம் செய்ததை குறிப்பிடலாம்.

1972 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் நாள் இராஜாஜியின் ஆன்மா மண்ணுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றது. அவரைப் போன்று பிறந்து மண்ணிற்குத் தொண்டு செய்யும் வீரர்களை உலகம் எதிர் நோக்குகின்றது.

— பேராசிரியர். மா. பா. குருசாமி

---

**★ உலகம் வாழ உத்தமர் வழி செல்வோம் ★**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

## 31.12.76 இல் உள்ள ஒன்றிணைக்கப்பட்ட ஐந்தொகை

### பொது நிதி

| | | |
|---|---|---|
| ஐந்தொகை மீதி | 1,45,549 | 69 |
| கழி,வரவுக்கு மிஞ்சிய செலவு | 3,005 | 89 |
| | 1,42,543 | 80 |

### நிதிகள்

| | | |
|---|---|---|
| அச்சுக் கூடம்-ஐந்தொகை மீதி | 1,860 | 00 |
| கிணறு - ஐந்தொகை மீதி | 7,200 | 00 |
| கட்டிடம் - ஐந்தொகை மீதி | 5,784 | 00 |
| வன்னித்தம்பி நினைவு நிதி | 200 | 00 |

### செல்மதிகள்

| | | |
|---|---|---|
| மக்கள் தொழிற்பாடு | 180 | 00 |
| பலவித செல்மதிகள்-தாள்-1 | 7,707 | 32 |
| கடன் செல்மதிகள் தாள் 2 | 50,132 | 50 |
| மாணவர் சேவை | 3,859 | 00 |
| எண்பார்வைக் கட்டணம் | 475 | 00 |
| ஆகமொத்தம் | 2,19,941 | 62 |

| | | |
|---|---|---|
| நிலம் | 25,994. | 45 |

### கட்டிடங்கள்

| | | |
|---|---|---|
| உணவகம், நெசவு முதலியன | 70,075 | 13 |
| கால் நடைக்கான தொழுவம் | 4 | 13 |
| கிணறு | 39,623 | 91 |

### தளபாடங்களும் பொருத்துக்களும்

| | | |
|---|---|---|
| தளபாடங்களும் உபகரணங்களும் | 2,853 | 61 |
| நெசவு | 38 | 80 |
| வானொலி | 5 | 90 |
| சுவர்க்கடிகாரம் | 12 | 07 |
| நீர் வடிகலம் | 74 | 50 |
| மாட்டு வண்டி | 620. | 54 |
| துவிச்சக்கர் வண்டி | 287 | 22 |
| கண்ணாடி அலுமாரி | 162 | 13 |
| தையல் மெஷின் (கஸ்தூரி) | 471 | 22 |
| ,, | 1,248 | 38 |
| மின்சாரப் பொருத்துக்கள் | 244 | 26 |
| அச்சகம் | 2,619 | 40 |
| பெற்றோமக்ஸ் | 114 | 82 |
| நீர் இறைக்கும் இயந்திரம் | 8,846 | 15 |
| கமத்தொழில் உபகரணங்கள் | 6,674 | 30 |
| உழவு இயந்திரம் | 37,340 | 00 |
| கலப்பை | 3,500 | 00 |
| இழுக்கும் வண்டி | 7,250 | 00 |
| வீட்டு விலங்குகள் | 130 | 00 |

### பங்குகள்

| | | | | |
|---|---|---|---|---|
| ப. நோ. கூ. சங்கம் கராச்சி | 154 | 00 | | |
| கூட்டுறவு அச்சகம் | 10 | 00 | 164 | 00 |
| கராச்சி ப. நோ. கூ. சங்க சேமிப்பு | | | 22 | 00 |
| சர்வோதய நிலையம் | | | 1,626 | 00 |

### வைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| மின்சாரம் | 75 | 00 | | |
| தொலைபேசி- இந்தியா | 150 | 00 | | |
| ,, - உள்ளூர் | 75 | 00 | 300 | 00 |
| கடன் வாங்கியோர் - குறிப்பு 3 | | | 735 | 35 |

### வங்கி மீதிகள்

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கி | 425 | 55 |
| இலங்கை வங்கி | 1,116 | 86 |
| தேசிய சேமிப்பு வங்கி | 658 | 36 |
| கையிருப்பு | 6,702 | 58 |
| ஆக மொத்தம் | 2,19,941 | 62 |

## சிறிய பத்திரிகைகளை நடாத்த அரச உதவி

அச்சுச் செலவு, பத்திரிகைத் தாள்களின் விலையேற்றம், சந்தைப்படுத்தல் வசதியின்மை, விளம்பரம் இன்மை இன்ன பல காரணங்களினால் இன்று சிறு பத்திரிகையாளர்கள் தலை தூக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரச விளம்பரங்களை வழங்குதல், குறைந்த விலையில் உபகரணங்களை விநியோகித்தல், பதிவுக் கட்டணத்தைக் குறைத்தல், அரசதிணைக்களங்களுக்கு பிரதிகளை வாங்குதல் போன்ற உதவிகள் மூலம் அரசாங்கம் சிறு பத்திரிகையாளர்களை ஊக்குவிக்கலாம்.

அரச உதவி பெறுவதற்கான முயற்சி கடந்த அரசாங்க காலத்தில் ஒரு குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எதுவித பயனும் கிடைக்கவில்லை.

நல்ல காரியங்களைச் செய்யப் போவதாக சூழுரைத்துள்ள இந்த அரசாங்கத்திடமிருந்து சில உதவிகளையும் சலுகைகளையும் பெறுவதற்காக முயற்சியில் ஈடுபட எண்ணியுள்ளோம்.

இவ்விடயத்தில் ஆர்வமுள்ளவர்களும் சிறு பத்திரிகை அச்சிடுவோரும் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகி: 'காந்தீயம்', ½, 47 ஆவது ஒழுங்கை, கொழும்பு –6, தொலைபேசி: 83579

★ சிக்கனமாகச் செலவிடல் சிறந்த வாழ்க்கை ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

**காந்தி நிலையம்**
**உருத்திரபுரம், [இலங்கை]**
**தொலைபேசி; 254**
**(கிளிநொச்சி)**
**காந்தி ஆண்டு 108**
**1978 பெப்ரவரி**


## நம் பணி

[ஜயப்பிரகாச நாராயண் மகாத்மா அமரரான நாள் குறித்து வெளியிட்ட செய்தி]

மகாத்மா மறைந்த நாள் நாம் ம்மை மக்கள் பணிக்கு மீளப் பணிக்கும் நாளாகும்.

வீடு ஒன்று முழுவதும் அழியப் போகும் நேரம் வரை பொறுத்திருந்து பழுது பார்க்க நினைப்பது பணியாகாது. வீட்டில் பழுது உண்டாகத் தொடங்கவே பணியும் ஆரம்பமாக வேண்டும். வீட்டினைப் போலத்தான் விடுதலையும். விடுதலையும் வீட்டைப்போல் இடைவிடாது பாதுகாக்க வேண்டிய ஒன்றாகும். குடிமக்கள் ஒவ்வொரு கணமும் விழிப்பாக இருந்தால்தான் விடுதலை அழிந்து போகாமல் பார்த்துக் கொள்ளலாம். இதற்கு மருந்து என்ன? வழி என்ன?

பெரிய ஒரு விடுதலையை நாடி உழைத்தால் தான் பாதியாகுதல் கிட்டும். பகுதிப்பட்ட நயங்களை, தனி ஒருவர் நலனைக் கருதி உழைக்காமல் முழுச் சமுதாயத்தையும் நோக்கி உழைக்க வேண்டும். சமுகத்தில் 'கடையவன்' என்று சொல்லப்படுகின்றவனை உயர்த்தாத எந்தப் பணியும் உண்மையான பணியாகாது. சர்வோதயத்தின் குறிக்கோள் அந்தோதயம் ஆகும். அந்தோதயம் என்பது கடையவனும் கடைத்தேறுதல்.

குறுகிய ஒரு குதியினரின் நன்மையை விரும்பிப் பாடுபடும்போது அது சமுதாயப்பணியாகாது. பணியின் மகத்துவமும் குறைந்து போகிறது. மிகத்தாழ் நிலையில் சிலமக்கள் இருக்கும்வரை சமுதாயப்பணியைப் பொது மக்கள் தாமாக மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய பணியை எந்த ஓர் அரசாங்கமும் தனியே செய்ய முடியாது. சமுதாயம் தான் பணியைச் செவ்விதாகச் செய்யலாம். சமுதாயம் செய்யத் தவறுகின்ற வேலைகளிலேயே அரசாங்கங்கள் வன்மையுடன் தலையிட்டு அதனைச் செய்ய முன்வருகின்றன.

இன்று நடுத்தர வகுப்பினர் சோம்பல் உடையவர்களாகி அரசாங்கமே எல்லாம் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள் போல் தெரிகிறது.

இன்று அரசாங்கத்தை ஆள்கின்றவர்கள் தம்மைத்தாமே நுணுகி ஆராய வேண்டும். தம் செயல்கள் நடவடிக்கைகள் மகாத்மாவின் இலட்சிய நெறியோடு இயைந்தவையா அல்லவா என்பதை அவர்கள் அவதானிக்க வேண்டும். தம் நெஞ்சையே நோக்கி, "என் எண்ணம் தூயதா, மற்றையவர்க்குச் சமுதாயத்திற்கு அது தீங்கிழைக்காதா" என்பதை அவர் கேட்க வேண்டும். "என்னாலியன்ற நன்மையைச் சேவையை சமூகத்திற்கு நான் செய்தேனா? என் செயல் எவ்வளவிற்கு நீதியானது? நாம் சிந்திக்கின்றபடி திட்டமிட்டபடி செயல்கள் நடக்கின்றனவா? நம் செயல்களால் சமுதாய எழுச்சி உண்டாகி இருக்கிறதா?" ஆளுங் கட்சியினர் இக் கேள்விகளை என்றும் தம் முன்னர் வைத்துச் செயற்பட வேண்டும்.

விடுதலை என்பது எதற்கும் அரசாங்கத்தை நம்பி இருப்பதல்ல. மக்கள் தாமாகவே சிந்தித்துத் தம் குறைபாடுகளை உணர்ந்து அவற்றை நீக்கச் செயற்படுதலாகும். நம்குறையைப் போக்க மற்றையவர் நடவடிக்கை எடுப்பதும், அவர் அரவணைப்பில் நாம் உண்டு உடுத்துச் சுகிப்பதும் சுதந்திரமாகாது.

— இ. இ.

## ஸ்ரீமன் நாராயண் காலமானார்

காந்தி நினைவு நிதியின் தலைவரும் சிறந்த காந்தியப் பொருளாதார மேதையுமான திரு. ஸ்ரீமன் நாராயண் 3-1-78 ஆம் நாள் அதிகாலையில் காலமானார் என்ற செய்தி அனைவருக்கும் வருத்தம் தருவதாகும்.

தில்லியிலிருந்து நாகபுரிக்கு இரயில் மூலம் பயணம் செய்து கொண்டிருந்த போது, மார்பு வலியால் அவர் அவதியுற்றார். குவாலியர் மருத்துவ மனைக்கு அவரை அழைத்துச் செல்லும் போது வழியில் இறந்துவிட்டார்.

இவர் காந்தியம் பற்றி பல நூல்கள் எழுதி, காந்தியத்துக்கே, தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர், அன்னாரின் மறைவு காந்திய உலகிற்கு பேரிழப்பாகும். அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

— ஆசிரியர்

## புதிய பத்திரிகை
## இனிமை
### மாத இதழ்

பண்டாரகம, அத்துளுகம 'இனிமை இலக்கிய வட்டம்' வெளியிடும் கலை, இலக்கிய மாசிகை முதல் இதழிலேயே அறுசுவை படைக்க தேன் சேர்த்தோரிற் பலர் எழுத்தாளர் உலகம் ஏற்கனவே கண்டவர்கள்.

நடையில் இனிமை, போக்கில் இனிமை இதிற்காணலாம். வெளியிடுவோர் நோக்கிலும் இனிமைவழிகிறது. 'கதை'யில் முடியாமல் இந்த அறுசுவை உண்டியில் பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் கலந்துவிட்டால் 'இனிமை' இன்னும் இனிக்கும். இன்சுவை பருகுவோரின் வயிறும் நிரம்பட்டும். கலை இலக்கிய மாசிகையல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினோபா விடை அளிக்கிறார்

வினா: நல்ல வாழ்க்கை என்று எதைக் கூறுகிறோம். நல்லமுறையில் வாழ எது உதவி செய்யும்?

வினோபா: உங்கள் வினாவிற்கு மூன்று சொற்களில் நான் விடையளிக்கிறேன். சமுதாயம், கல்வி ஆகிய இவ்விரண்டிற்கும் சத்தியம், அன்பு, கருணை அடிப்படையாக இருக்க வேண்டும். கருணை என்பதற்குப் பொருள் துன்புற்றோருக்கு உதவுவதும் அவர்களது துன்பத்தைக் கண்டு நாம் வருந்துவதும் தான். பிறருடைய சுகத்தைக் கண்டு நாம் சுகப்படுவதுதான் அன்பிற்கு இலக்கணம். எந்த சமயத்தில் எது நமக்கு எவ்வாறு தோன்றுகிறதோ அதை அப்படியே வெளியிடுவதுதான் சத்தியமாகும். உங்கள் கருத்து ஒருவேளை மாறிவிட்டதெனில் அதை மாற்றிக் கொள்ளவும் தயாராக இருக்கவேண்டும்.

வினா: மக்களாட்சியில் மக்களுக்கும் அரசுக்கும் வேறுபாடு இல்லை. எனவே ஆட்சியினரிடம், உதவி பெருமலிருப்பது எந்த அளவுக்கு சரி?

வினோபா: மக்களாட்சியில் மக்களுக்கும் அரசுக்குமிடையே பெரும்வித்தியாசமிருக்கிறது. இப்போது என்ன நடக்கிறது? ஒரு கட்சி மக்களிடம் வந்து 'எங்களுக்கு நீங்கள் வாக்களியுங்கள். உங்களை முன்னேற்றுவோம்' என்று கூறுகிறது. இன்றைய அரசு பத்தாண்டுகளில் வறுமையை அகற்றி விடுமெனக் கூறப்படுகிறது. எனவே இன்று வறுமையில் வாடுபவரிடம் 'உன்னுடைய வறுமை இன்னும் பத்தாண்டுகளில் அகன்று விடும்; எனவே மகிழ்ச்சியாக இரு' என்று கூறுங்கள். அவன் என்ன கூறுவான்? 'இன்றே நான் ஏழையாக இருக்கிறேன்' என்பான். இந்த அரசு இதைச் செய்யும்; அந்த அரசு அதைச் செய்யும்! என்பதென்ன? 'உத்தரேத் ஆத்மனு ஆத்மானம்' என்று கீதை கூறியிருக்கிறது. நாம் தான் நம்மை முன்னேற்றிக் கொள்ள வேண்டும். இன்று யார் வந்தாலும் சரி, எங்களுக்கு வாக்களியுங்கள் என்று கூறுகிறார்கள். யாருமே மக்களிடம் அவர்களது முன்னேற்றம் அவர்கள் கைகளில் தான் இருக்கிறதென்பதைக் கூறுவதில்லை. எனவே ஒவ்வொரு கிராமத்தையும் வலுப்படுத்த வேண்டும். கிராமத்தில் எல்லோரும் இணைந்து வேலை செய்ய வேண்டும். கிராமத்தினர் மதுபோதையிலிருந்தும் நீதிமன்றத்திடமிருந்தும் விடுதலைபெற வேண்டும். கிராமத்தில் யாரும் வேலையின்றி இருக்கக்கூடாது. இவையெல்லாம் கிராமத்தில் நடைபெறவேண்டும். எனவே கிராமங்கள் தங்கள் முன்னேற்றம் தமது கையிலேயே இருக்கிறதென்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

வினா: அரசியல் வாதிகளுக்கு எவ்வாறு விடுதலை கிடைக்கும்?

வினோபா: அரசியல் வாதிகளே தான் இவ்வாறு கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

# சுகமும் - அமைதியும் ...

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பு நடை பெற்ற நிகழ்ச்சி. பகவான் புத்தர் ஒரு கிராமத்தில் தங் யிருந்தார். கிராம வாசி ஒருவர் அவரிடம் வந்து ''ஐயனே, தாங்கள் முப்பது ஆண்டுகளாக அமைதி சத்தியத்தைத் தேடுதல், மோட்சம் அடைதல் பற் உபதேசித்துக் கொண்டிருக்கிறீர்களே, இதுவரை எத்தனை பேர்கள் இவற்றை அடைந்துள்ளனர் என்பதை விளக் யருளவேண்டும்'' என்றார்.

புன்முறுவல் பூத்தவாறு இவற்றைக் கேட்டுக் கொ டிருந்த பகவான் புத்தர், ''நீங்கள் நாளைக்கு இங்குவாரு கள், உங்களின் வினாவிற்கு விடையளிக்கிறேன். வரு போது ஒரு பணியைச் செய்து வரவேண்டும்'' என்றார்.

கிராமம் முழுவதையும் சுற்றி மக்களனைவரையு சந்தித்து யார் அமைதியை விரும்புகிறார்கள்? சத்தியத்தை தேட விரும்புவோர் யார்? மோட்சத்தை அடைய விரும் வோர் யார்? யார்? என்ற விபரங்களைச் சேகரித் வரவேண்டும் என்றார் பகவான் புத்தர்.

இதைக்கேட்ட கிராம வாசி '' ஐயனே, இவற்ற விரும்பாத் துரதிஷ்டசாலியாரே இங்கிருப்பார்'' என்ற யார்? யார்? எதை விரும்புகின்றனர் என்பதை ஒரு முறை தெரிந்து வாருங்கள் என்றார் பகவான் புத்தர்.

கிராம வாசி; கிராமத்திற்குச் சென்றார். மணிக்கண காக அலைந்து அனைவரையும் சந்தித்து அவர்களில் யா மோட்சத்தை விரும்புகிறவர்கள்? யார் அமைதியை நா கின்றனர்? சத்தியவேட்கையை நாடுவோர் யார்? என்பதை அறிய முற்பட்டார். அமைதியை விரும்புகிறேன், அல்ல மோட்சத்தை விரும்புகிறேன், சத்தியத்தைக் காண விரு கிறேன், என்று கூறும் ஒருவர் கூட அவருக்குக் கிடைக் வில்லை. சந்தித்தவர்களில் சிலர், எனக்குப் பொருள் வேண் டும், எனக்குப் புகழ் வேண்டும், நோயினின்று விடுதலை வேண்டும், எனக்கு மக்கட்பேறு வேண்டும், எனக் ஏதாவது வேலை கிடைக்க வேண்டும், நெடிய ஆயுள் வேண் டும் என்று கூறினர்களேயன்றி, மோட்சம் வேண்டும் சத்தியத்தைக்காண வேண்டும், அமைதி வேண்டு என்று கூறுவார் ஒருவருமிலர்; இந்நிலை, அறிந்த கிரா வாசி கலக்கமெய்தினர். புத்த பகவானிடம் சென்றா ''ஐயனே, இஃது ஓர் அதிசய கிராமமாக இருக்கிறது. எ லோரும் ஏதாவது ஒன்றை விரும்புகிறார்களேயல்லாமல் மோட்சத்தையோ அமைதியையோ, சத்தியத்தையோ நாடுவோர் ஒருவர் கூட இல்லை'' என்றார். அதிசயம் ஒன் மில்லை நம்மில், அதிகமானவர்கள் சுகத்தை விரும்புகிறா களேயன்றி அமைதியை விரும்புவதில்லை. சுகத்தைப் பெ அமைதியை அடையும் வழிக்கு மாறான வழியில், எதி வழியில் செல்லுகின்றனர். சுகத்திற்குச் செல்லும் வ அமைதியை நாடிச் செல்லும் வழியாகாது.

இன்று நிலையற்ற இன்பங்களை நாடி தங்களது காலம் ஆற்றல், அறிவு ஆகிய அனைத்தையும் ஈடுபடுத்துகின்றா களேயன்றி, என்றும் நிலைத்து நிற்கும் அமைதி, சத்திய மோட்சம் ஆகியவற்றை அடையும் முயற்சியில் ஈடுபடு தில்லை.

— யஷ்பால் ஜெயின் —

நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம் ★

# 'காந்தீயம்' வாழ்க!

1. ஒரிதழ் கண்டனன் உற்றதை நோக்கினன்
ஒன்றும் புரியவில்லே!
பேரினைக் காணப் பிரித்துப் படித்தனன்
பேரது 'காந்தீயம்'!
சீரிதழாயது தென்படவே எந்தன்
சிந்தை மகிழ்ந்ததடா!
ஊரினிலிங்கிது போற் பல ஏடுகள்
உலவிட வேண்டுமடா!

2. 'காந்தீயம்' உண்மையில் காந்தி வழியினைக்
காட்டுவதாலிதனை
ஏந்திக் கரத்தில் இருந்து படிப்பது
எமக்குப் பெருமையடா!
சாந்தி தரும் மனச் சஞ்சலம் நீக்கிடும்
தண்டமிழ்த் தேனமுதம்
மாந்திடும் வண்டென வையக மீதெமை
மாற்றிடச் செய்யுமடா!

3. எட்டினைத் தொட்டதும் எம்மனம் உண்மையில்
இவ்வுலகை மறந்தே
நாட்டியமாடிடும் நம் கிழக் காந்தியை
நாடிடவே துணியும்!
போட்டியை பொய்யை பொறாமைகளைப் பெரும்
போரினை இங்கிருந்து
ஓட்டித் துரத்திடும் உண்மையில் நம்மவர்
ஒற்றுமை பெற்றிடுவார்!

4. எவ்விதழ் எப்படி எவ்விதம் செல்லினும்
எம்மைப் பொறுத்த வரை
இவ்விதழ் என்றும் இனியனவே தரும்
என்பதை நம்பிடுவோம்!
அவ்வளவாகப் பெரும் பெரும் ஏடுகள்
ஆற்றிடா வேலை எலாம்
செவ்வையுடன் நிறைவேற்றிடு 'காந்தீயத்'
திங்களிதழ் வாழ்க!

'தாமரைத்தீவான்'

## காந்திஜியின் வாழ்க்கையிலே!

1930 ஆம் ஆண்டு தண்டி யாத்திரை நடந்துகொண்டிருந்தது. காந்திஜியுடன் இரவு நேரங்களில் ஒரு கனமான விளக்கையும் அதை வைக்க ஒரு இருக்கையையும் ஒரு ஆள் தூக்கிச் செல்வது வழக்கம். காந்திஜி வேகமாக நடக்கும் பொழுது அவருடன் வேகமாக ஓடிச் செல்லும்படி அந்த ஆள் வற்புறுத்தப்பட்டார். இது காந்திஜிக்குத் தெரிய வந்தது.

உடனே அவர் "பெரிய பாரத்தைச் சுமந்துகொண்டு ஒரு ஆளை வேகமாக ஓடும்படி வற்புறுத்துவது அல்லது துன்புறுத்துவது மனிதத்தன்மையல்ல. இதயமற்றதன்மையைத்தான் அது காட்டுகிறது. அந்த பாரத்தை நம் தொண்டர்களில் ஒருவர் ஏன் சுமக்கக்கூடாது? நாம் இவ்விதம் நடந்துகொண்டால் மக்களிடம் நாம் பேசும் சுயராஜ்யத்திற்கு அர்த்தமேயில்லை" என்றார்.

# மன அமைதியோடு வாழ!

— ஞானோதய வைத்தியர் சி. க. மாணிக்கவாசகம்

உலகத்தில் வாழ்கின்ற மக்களில் பெரும்பான்மையானோர் மன அமைதி பெறும் வழி தெரியாமல் ஏழைகளும் செல்வந்தர்களும் மன நிம்மதியின்றி வாழ்க்கையினை நடத்தி வருவதும் பலரும் அறிந்ததே யாகும். இதன் மூலக்காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்கின்ற போது உறுதியான உள்ளம் இல்லாமையேயெனத் தெரிய வருகின்றது. உறுதியான உள்ளத்தை உடையவர்களாக மாற்றமடைந்து வாழ்வது எப்படி?

உதாரணமாக ஆறு சக்கரங்களையுடைய பேருந்து (பஸ்) அல்லது லொறி முழுமையான ஆறு சக்கரங்களுடன் முறைப்படி செல்லும் போது, தக்க பளுவைத் தாங்கிக் கொண்டு நெடுந்தூரம் பலவிதமான பாதையின் அதிர்ச்சிகளையும் தாங்கிக்கொண்டு சென்று திரும்பி வந்து சேருகின்றது. நெடுங்காலம் உறுதியுடனும் விரைவில் பழுதடையாமலும் உபயோகமாக இருந்து வருகின்றது.

ஆனல் ஒருலொறி அல்லது பஸ் ஆறு சக்கரங்களில் ஒன்று பழுதடைந்த நிலையோடு செல்லுமானல் குறிப்பிட்ட இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேராது. வழியின் நடுவிலேயே வாகனம் விழுந்து சேதமடைந்து விடக்கூடுமல்லவா?

இது போன்றேதான் மனிதர்கள் முறைப்படி உண்ணவேண்டிய அறு சுவைகள் கொண்ட உணவு வகைகளில் 'கசப்பு' சுவைக்குரிய (காய்கறி, கீரை) உணவினை உட்கொள்ளாமல் மீதமுள்ள ஐந்து சுவைகளுக்குரியவைகளையே உட்கொள்ளும் காரணத்தினல் முழு உடல் வளர்ச்சியும் உள வளர்ச்சியும் உடல் சக்தியையும் அடைய முடியாத நிலை உண்டாகிவிடுகின்றது. இதன் காரணமாக வாழ்க்கையில் ஏற்படும் பலவித அதிர்ச்சிக்குரிய சம்பவங்களைத் தாங்கிக் கொள்ளும் மன நிலை ஏற்படாமல் போய்விடுகின்றது. ஆகவே பெரும்பான்மையான பேர் மன அமைதியின்றி வாழ்ந்து வருகின்றனர்.

ஆகவே இனியாவது முழு உடல் வளர்ச்சியும் உள வளர்ச்சியும் பெறவும் நோயற்ற வாழ்வு பெறவும் இடமான மனோ சக்தி (WILL POWER) அடையவும் மனிதர்கள் முறைப்படி உண்ண வேண்டிய அறுசுவை உணவில் 'கசப்பு' சுவைக்குரிய காய்கறி, கீரை வகைகளை நீக்காமல் கலந்துண்டு நலமுடன் மன அமைதியோடு நீடூழி வாழ்வார்களாக! கசப்பில்தான் உண்மையான மனநிலை ஏற்படும். 'உண்மையைச் சொன்னல் கசக்கின்றதா?' என்ற பழமொழியைச் சிந்தித்து உணருங்கள். 'கசப்பு' சுவைக்குரிய உணவுவகைகளை நீக்கியவர்கள் விரைவில் மடிந்து (இறந்து) வருவதைக்காண்கிறோம். இனி 'கசப்பு' ச்சுவையை தவறாமல் உண்போரை நூறாண்டுக்கு மேலும் நோயின்றி, மன அமைதியோடு வாழப் போவதைக் காண்போமாக!

நன்றி: சர்வோதயம்

## அரசியல் பாம்பு

அரசியலில் நான் பங்கெடுத்துக் கொள்வதாகத் தோன்றுகிறதென்றல், அதற்குக் காரணம், இன்று அரசியல் ஒரு பாம்பைப்போல நம்மைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. எவ்வளவுதான் ஒருவன் முயன்றலும் அதிலிருந்து விடுபடமுடியவில்லை. எனவே நான் பாம்புடன் போராட விரும்புகிறேன்.

— மகாத்மா காந்தி

★ நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு உன் பங்கைச் செய் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பத்துத்தானம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க, கொழும்புக் கிளையின் நிர்வாகத்தின் கீழுள்ள இரத்மலானை - சர்வோதய நிகேதனம் மாணவர் இல்லத்திற்கு 1977 சனவரி மூதலாந்திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை (12 மாதங்கள்) சம்பத்துத்தானம் அளித்த அன்பர்கள்.

**இரத்மலானை**

| | | |
|---|---|---|
| திருமதி. அமிர்தலிங்கம் | 2 | 00 |
| ,, என். யோகராஜா | 10 | 00 |
| ,, ஏ. சி. எம். தாஹா | 1 | 00 |
| ,, ம. சுப்பிரமணியம் | 5 | 00 |
| ,, சிவபோதநாதன் | 6 | 00 |
| ,, சி. வி. ஐ. சாஸ்தா | 20 | 00 |
| இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ் | 2 | 00 |
| நெப்யூன் பாமஸி | 2 | 00 |

**கல்கிசை**

| | | |
|---|---|---|
| திருமதி. வே. கனகராஜா | 10 | 00 |

**இரத்தினகார இடம், தெகிவளை**

| | | |
|---|---|---|
| திருமதி. கா. சங்கரப்பிள்ளை | 2 | 00 |
| ,, க. க. சுப்பிரமணியம் | 9 | 00 |
| ,, ஏ. அமிர்தானந்தன் | 11 | 00 |
| ,, சி. பற்குணராஜா | 1 | 00 |
| ,, நா. வரதராசா | 2 | 00 |
| ,, நேசரத்தினம் | 1 | 00 |
| ,, செல்வகாந்தன் | 5 | 00 |
| ,, க. கந்தசாமி | 2 | 00 |
| ,, ம. கலகலிங்கம் | 20 | 00 |
| ,, எஸ். கனகசிங்கம் | 20 | 00 |
| ,, செ. செல்வரத்தினம் | 2 | 00 |
| ,, தா. இரத்தினசிங்கம் | 55 | 00 |
| ,, ஆர். சிதம்பரநாதன் | 11 | 00 |
| ,, ஆர். தர்மலிங்கம் | 3 | 00 |

**காலி வீதி**

| | | |
|---|---|---|
| திரு. ஐயாத்துரை | 24 | 00 |
| திருமதி. அட்சரமூர்த்தி | 22 | 00 |
| செல்வி. உமா. குகதாசன் | 36 | 00 |
| திருமதி. சி. விவேகானந்தன் | 18 | 00 |

**வெள்ளவத்தை, நகரசபை வீடுகள்**

| | | |
|---|---|---|
| திருமதி. எஸ். வைத்திலிங்கம் | 22 | 00 |
| எஸ். பி. சோமசுந்தரம் | 24 | 00 |
| கே. துரைசிங்கம் | 8 | 50 |

**இராமகிருஷ்ண வீதி**

| | | |
|---|---|---|
| திருமதி. பொ. இராசநாயகம் | 16 | 00 |
| ,, க. கணபதிப்பிள்ளை | 2 | 00 |
| ,, க. வெங்கடாசலம் | 4 | 00 |
| ,, இ. நடராசா | 2 | 00 |
| ,, ந. இராசரத்தினம் | 15 | 00 |
| திருமதி. சி. சுப்பிரமணியம் | 12 | 00 |
| ,, ர. குலேந்திரன் | 8 | 00 |
| ,, ம. சிங்கம் | 12 | 00 |
| ,, சிவகுருநாதன் | 3 | 00 |
| ,, சிவஞானப்பிரகாசம் | 5 | 00 |
| ,, சச்சிதானந்தன் | 10 | 00 |
| ,, க. கணபதிப்பிள்ளை | 1 | 00 |
| ,, நடராஜா | 11 | 00 |
| ,, தியாகராஜா | 8 | 00 |
| ,, நவரத்தினம் | 10 | 00 |
| திரு. கே. சிவப்பிரகாசம் | 14 | 00 |

**ஆஸ்பத்திரி வீதி**

| | | |
|---|---|---|
| திருமதி. இராசசுந்தரம் | 45 | 00 |
| ,, ச. மார்க்கண்டு | 18 | 00 |
| ,, சு. துரைராசா | 8 | 00 |
| ,, சிவசுப்பிரமணியம் | 8 | 00 |

**பெரேரா ஒழுங்கை**

| | | |
|---|---|---|
| திருமதி. பி நடராஜா | 40 | 00 |
| ,, கமலினி சோமசேகரம் | 14 | 00 |

**காமர்ஸ் இடம்**

| | | |
|---|---|---|
| திருமதி. க. இராசரத்தினம் | 6 | 00 |
| ,, தம்பிப்பிள்ளை | 90 | 00 |

**அலெக்சாந்திரா வீதி**

| | | |
|---|---|---|
| திருமதி. காராளசிங்கம் | 14 | 00 |
| ,, அம்பலவாணர் | 9 | 00 |
| ,, எஸ். பி. செல்வரத்தினம் | 2 | 00 |
| ,, எஸ். கந்தையா | 18 | 00 |

**சார்லிமென்ற் ரோட்**

| | | |
|---|---|---|
| திருமதி. சின்னத்தம்பி | 20 | 00 |

**டேவிட்சன் வீதி**

| | | |
|---|---|---|
| திருமதி. பொ. காராளசிங்கம் | 10 | 00 |
| ,, க. இராசலிங்கம் | 16 | 00 |
| ,, சிவசுப்பிரமணியம் | 4 | 00 |
| ,, ப. தயானந்தராஜா | 90 | 00 |

**வவசற் பிளேஸ்**

| | | |
|---|---|---|
| திருமதி. ம. குணதிலக்க | 11 | 00 |

**புகையிரத நிலைய வீதி**

| | | |
|---|---|---|
| திருமதி. ஆ. குணநாயகம் | 16 | 00 |

**இராஜசிங்க ரோட்**

| | | |
|---|---|---|
| திருமதி. என். செல்லையா | 20 | 00 |

**36 ஆவது ஒழுங்கை**

| | | |
|---|---|---|
| திருமதி. ஆனந்தன் | 2 | 00 |
| ,, பி. ஆறுமுகம் | 4 | 00 |
| ,, க.சுப்பிரமணியம் | 110 | 00 |
| ,, கணேசன் | 7 | 00 |

**ஈ. எஸ். பெர்னாந்து மாவத்தை**

| | | |
|---|---|---|
| திருமதி. சி பரராசசேகரம் | 33 | 00 |
| ,, நடராசா | 20 | 00 |
| ,, எம். நேசதுரை | 4 | 00 |
| ,, குமாரசாமி | 12 | 00 |
| திருமதி. என். கந்தசாமி | 12 | 00 |
| ,, கனகசபை | 7 | 00 |

**விவேகானந்தா ரோட்**

| | | |
|---|---|---|
| செல்வன். சஞ்சீவன் சிவலிங்கம் | 45 | 00 |
| திருமதி. யோ. தியாகராஜா | 2 | 00 |
| ,, எஸ். ஆறுமுகரத்தினம் | 20 | 00 |
| ,, எஸ். இராசையா | 12 | 00 |
| ,, இரங்கநாதன் | 2 | 00 |
| ,, க. இரத்தினம் | 2 | 96 |
| ,, சுந்தரம்பிள்ளை | 10 | 00 |
| ,, க. கந்தசாமி | 7 | 00 |
| ,, பாலசுப்பிரமணியம் | 22 | 00 |

**ஹம்டன் லேன்**

| | | |
|---|---|---|
| திருமதி. சகுந்தலா பத்மநாதன் | 50 | 00 |
| ,, பரஞ்சோதி | 9 | 00 |

**உருத்திரா மாவத்தை**

| | | |
|---|---|---|
| திருமதி. ஜெர்மையா | 16 | 00 |

**மனிங் பிளேஸ்**

| | | |
|---|---|---|
| திருமதி. இராசலிங்கம் | 50 | 00 |
| ,, சி. நித்தநாயகம் | 35 | 00 |

**53 ஆவது ஒழுங்கை**

| | | |
|---|---|---|
| திருமதி. ப இராசமாணிக்கம் | 10 | 00 |
| செல்வி. கலாநாயகி சிதம்பரநாதர் | 10 | 00 |

**55 ஆவது ஒழுங்கை**

| | | |
|---|---|---|
| திருமதி. இ. சற்குணநாயகம் | 12 | 00 |

**தயா வீதி**

| | | |
|---|---|---|
| திருமதி. ப. இரத்தினசபாபதி | 3 | 00 |

**கல்யாணி வீதி**

| | | |
|---|---|---|
| திருமதி. இ. இரத்தினம் | 27 | 00 |
| ,, எஸ். தணிகாசலம் | 9 | 00 |
| ,, திருநாவுக்கரசு | 10 | 00 |
| ,, கார்த்திகேசு | 2 | 00 |
| ,, மகேஸ்வரன் | 2 | 00 |
| ,, சீவரத்தினம் | 12 | 00 |
| ,, சி. கிருஷ்ணராஜா | 27 | 00 |

**ஹரிச்சந்திரா மாவத்தை**

| | | |
|---|---|---|
| திருமதி. ம. நடராஜா | 8 | 00 |
| ,, ம. கனகசபை | 1 | 00 |
| ,, த. மகாதேவன் | 1 | 00 |

**W. A. சில்வா மாவத்தை**

| | | |
|---|---|---|
| திருமதி. தி. கந்தசாமி | 18 | 00 |
| ,, சொ. இராசநாயகம் | 33 | 00 |
| ,, தா. கணேந்திரன் | 18 | 00 |
| செல்வி. தேவகி செல்லப்பா | 22 | 00 |

**பாமன்கட ஒழுங்கை**

| | | |
|---|---|---|
| திருமதி. செ. காராளசிங்கம் | 12 | 00 |
| ,, பொ. குலசிங்கம் | 3 | 00 |

**இராசவல்லி ஒழுங்கை**

| | | |
|---|---|---|
| திருமதி. வேலாயுதபிள்ளை | 23 | 00 |

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்)

★ தானம் தனைக் காப்பதற்கே ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பர்கள் தபால்

## அருமையான படைப்பு

ஒக்ரோபர் மாத காந்தியம் கிடைக்கப் பெற்றுப் படித்தேன். அருமையாக உள்ளது. "கீரி - பாம்புச் சண்டை" கட்டுரை வெகு பிரமாதம்; "நாவடக்கம்" அடக்கமான அருமையான படைப்பு.

முள்ளியவளை மதுபாலன்

★ ★ ★

## 'காந்தியம்' வெற்றி தருமா?

சென்ற வருடம் நடைபெற்ற இனக்கலவரம் என் மனத்தை மிகவும் பாதித்திருந்தது. அப்பாவி மக்கள் வெறியர்களாலும் பொலிசாராலும் தாக்கப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்டது எவ்வளவு கொடூரம். இந்த வெறியர்களிடையே காந்திய-சர்வோதயம் வெற்றிபெறுமா?

இது தவிர நம்மிடையே ஆயுதம் தாங்கிய இளைஞர்களின் கொள்ளையடிப்பு, கொலை, இவை மட்டுமா, சமீபத்தில் யாழ் புகையிரத நிலையத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட போது நம் இளைஞர்கள் நடந்து கொண்டவிதம் உட்பட பல நிகழ்ச்சிகள் என் மனத்தை வெகுவாகப் பாதித்தது. இன்றைய சூழ்நிலையில் 'காந்தியம்' வெற்றி தருமா? இல்லையேல் சட்டமூலம் எடுக்கும் நடவடிக்கையா வெற்றி பெறும்?

ஆ. விஜயகுமூர்த்தி
மானிப்பாய்

★ ★ ★

## எழுத்தில் வடிக்க அவா

நீண்ட நெடு நாட்களாக வெளி வந்து கொண்டிருக்கும் "காந்தியத்தை' நான் அடிக்கடி நுகர்வதுண்டு. எனது எண்ணக் கருத்துக்களை எழுத்தில் வடிக்க அவாக்கொண்டுள்ளேன்.

மன்னார் கலைவாதி கலீல்

## அரிய தொண்டு

'காந்தியம்' இதழ் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. போட்டி, பொறாமை, காழ்ப்பு, குரோதம், விரோதம், தன்னல முனைப்பு முதலிய தீய குணங்களை சமூகத்திலிருந்து அகற்றிட 'காந்தியம்' புரியும் அரிய தொண்டுக்கு தண்ணளி மிக்க இறைவன் அருள் புரிவான்.

அன்பும் அருளும் அறமும் தழைத்தோங்குக!

க. கந்தசாமி
கரவெட்டி ("கரவைகிழார்)

# பூரண மது விலக்கு

பொரளை பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை மதுவிலக்கு இயக்கத்தின் 65 ஆவது ஆண்டுக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மதுக் கடைகளை மூடவும் விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை மீண்டும் நீடிக்காதிருக்கவும் தீர்மானித்திருப்பதையிட்டு மகிழ்ச்சி தெரிவிப்பதோடு, அவசியமானவர்களுக்கு அபின் வாங்க அனுமதிப் பத்திரம் வழங்கியிருப்பது போல் அவசியம் மது அருந்த வேண்டியவர்களுக்கு மட்டும் அனுமதிப்பத்திரங்களை வழங்கி, இந்நாட்டில் பூரண மதுவிலக்கை அமுல் செய்யுமாறும் வடிசாலைக் கூட்டுத்தாபனத்தை மூடி விடுமாறும் அரசாங்கத்தை மது விலக்கு இயக்கம் வேண்டிக் கொள்கிறது.

# உலகம் ...

(முன்பக்கத் தொடர்ச்சி)

பிரச்சாரத்திலும், சில மதத்தவர் இது போன்ற கொள்கையை பின்பற்றுகிறார்கள். ஆர்ய சமாஜத்தவர் பிற கருத்துடையவர்களை தங்கள் கூட்டத்தில் சேர்ப்பதில்லை. அவர்கள் எந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டும், எதைச் செய்ய வேண்டும் என்பதெல்லாம் திட்டவட்டமாகக் குறித்திருக்கிறார்கள். துளசிதாசரின் இராமயணத்தைக் கூட அவர்கள் படிக்கக் கூடாத நூல்களில் சேர்த்திருக்கிறார்கள். எனவே மனிதன் தனது சமுதாயத்தை வளர்க்க, தனது கருத்தை வளர்க்க எதையும் செய்யத் துணிவது சரியல்ல. அது மனித சமுதாயத்தை அழித்துவிடும். ஆனால் சமுதாயம் நிலைத்திருக்க வேண்டும்; மனிதன் தனது கருத்திற்கிணங்க வாழ சுதந்திரம் இருக்க வேண்டும் என்பவை அனைவரின் விருப்பமாகும். ஆகவே அதற்கு உகந்தமுறை தனது கருத்தைப் பிறர் முன் வைத்து, அதன் சிறப்புகளை ஆராய்வது; அதன் விளைவாக அதில் சிறிய திருத்தங்களைச் செய்வது. மேலும் அக்கருத்தை அனைவருக்கும் பயன் தரும்படி வளர்ப்பது, முதலியன தகுந்த முறைகளாகும்.

எனவே பல கருத்தைக் கொண்டவர்கள் ஒன்றுபட வேண்டும். அவரவர்கள் கருத்தை அனைவரின் நலன் என்ற உரைகல்லில் உரைத்துப் பார்க்க வேண்டும். அதன் விளைவால் பல கருத்துக்கள் ஒன்றாகக் கடையப்படும். அதிலிருந்து கிடைக்கும் வெண்ணெயே 'சர்வோதயம்' (அனைவரின்மேம்பாடு) எனப்படுவது. 'அனைவரின் மேம்பாடு' என்பது குறிக்கோளாக அமையும் போது 'எனது கட்சி, மற்றவனின் கட்சி' என்ற கருத்திற்கு அதில் இடமில்லை. 'ஒரு உலகம்' என்ற கருத்தே இதிலிருந்துதான் பிறக்கிறது.

இத்தகைய பரிசோதனையின் முதல் அங்கமே ஜனநாயகம் என்ற சோதனை, ஒரு குடும்பத்தில் பல தரப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து வாழ்வது எப்படி சாத்தியமோ அதே போல் இவ்வுலகிலும் பல கருத்தைக் கொண்ட தேசங்கள் ஒன்றாக வாழ்வது சாத்தியம். அதில் தான் வாழ்விருக்கிறது. எனவே முக்கியமானது முடிவு அல்ல, இலட்சியமல்ல; அந்த லட்சியத்தை அடையும் சாதனங்களே முக்கியமானவை. அன்பு ஒன்றே இணைக்கும் சக்தியாக அமையமுடியும். சத்தியம் அதற்கு உற்ற துணையாக சக்தியாக அமையும், இந்த முறையில் அமைந்தால் வேலைத் திட்டங்கள் அமைவதில் தாம்தம் ஏற்படலாம். ஆனால் அதை பற்றி அதிககவலை கொள்ள வேண்டியதில்லை. அரசியல் கொள்கைகள், மதக் கொள்கைகள் யாவும் இன்று பிளவை நோக்கி இயங்கி வருகின்றன. ஆகவே அவை பழமையடைந்து விட்டன என்று நான் கருதுகிறேன், ஒன்றுபட வேண்டுமானால், அவற்றிற்குப் பதிலாக விஞ்ஞானமும், மெஞ்ஞானமும் ஒன்றுபட வேண்டும்' என்று கூறுகிறேன். அதன்படி நடந்தால் 'ஜய்ஜகத்' என்ற சொல் வெறும் கோஷமாக அல்லாமல் தனவாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை.

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் திரு. கி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு — குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

Registered at the G. P. O as a Newspaper in Sri lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org